# பொழுதிற்கும் உண்டோ மறக்கும் நொடி?



(விருதுநகர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மேனாள் செயலாளரும், மேனாள் அமைச்சருமான மறைந்த வே.தங்கபாண்டியன் அவர்களின் இருபத்தி ஆறாம் ஆண்டு நினைவு நாளையொட்டி (31.07.2023) அவரது மகள் கவிஞர்.தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. எழுதியுள்ள கவிதாஞ்சலி)

**வெ**ள்ளாட்டு மந்தையொலியோடு
விடிகின்ற அதிகாலைகள்
அப்பாவிற்குப் பிடித்தமானவை.
அரைத்தூக்கமுடன் அவரது தோளுறங்கும்
என்னை அசங்காமல்
தலையணைக்கு மடைமாற்றல்
சத்தமின்றி செய்தித் தாளடுக்குதல்
கசப்பான இனிப்போடு காபி குடித்தலென
அந்த நேரத்து அப்பாவை
அப்படியே வைத்திருக்கிறேன்
கனல் சுட்ட வடுவின்
காந்தலை மறவாக் கனவு போல!

வேம்பின் இலைகள் சோம்பியிருக்கும்
பின் மதியங்கள் அப்பாவிற்குப் பிடித்தமானவை.
ஒரு புத்தகப் புரட்டல்
கடலைமிட்டாய் சுவைத்தல்
அம்மாவை வம்புக்கிழுத்தலென
அந்த நேரத்து அப்பாவை
அப்படியே வைத்திருக்கிறேன்
அகழ்வாராயும் கரங்களின்
அனுபவ ரேகைச் சுகம் போல!

மயில்கள் மரமடைகின்ற
அழகு அந்திகள் அப்பாவிற்குப் பிடித்தமானவை.
மக்களோடு பயணித்தல்
மகிழுந்தை நிறுத்திக் கைகுலுக்கல்
ஆழ்ந்த சிந்தனையுடன்
அடிவானம் பார்த்திருத்தலென
அந்த நேரத்து அப்பாவை
அப்படியே வைத்திருக்கிறேன்
மழை சுகித்த மண்சுவற்றில்
அடர்ந்திருக்கும் நினைவுப் பச்சயமென!

நிராயுதபாணியாய் நிலவொளிரும்
நடு இரவுகள் அப்பாவிற்குப் பிடித்தமானவை.
அம்மாவிடம் விருப்பப் பாடல்கள்
அன்றைய தினத்தின் பகிரல்கள்
பிள்ளைகளிடம் பகிர்ந்துண்டு
விண்மீன்களிடம் பகடி செய்தலென
அந்த நேரத்து அப்பாவை
அப்படியே வைத்திருக்கிறேன்.
கடல் மீறும் அலை தணிக்கும்
நுரைப் பூ பிறப்பென!

பொழுதுகள் புலர்ந்து உதிர்ந்து
பருவங்கள் பல கடந்த பின்னும்
ஒரு பிச்சைக்காரியின் பசியென
எனைத் துரத்தும் நிழலாய்
நான் அருகில் இல்லாமல் மரணித்த
அந்த நேரத்து அப்பாவையும்
அப்படியே வைத்திருக்கிறேன்
ஒரு தோல்வியின் துருவில்
முனைமழுங்கிய குறுவாளின் துயரமென!



**தமிழச்சி**
**தங்கபாண்டியன் எம்.பி.**

## வங்கியில் இருந்து ரூ. 50,000 வரை எடுக்கலாம்!

புதுடெல்லி, ஜூலை 31 -

மத்திய ரிசர்வ் வங்கியின் உத்தரவின்படி, வங்கிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் அடுத்த 6 மாதங்களுக்கு அமலில் இருக்கும், இந்த கட்டுப்பாடுகளின் கீழ், புதிய கடன்களை வழங்கவோ, பழைய கடன்களை புதுப்பிக்கவோ முடியாது. வங்கியும் புதிதாக முதலீடு செய்ய முடியாது. இந்த நிதியத்தால் கடன் வாங்கவோ, புதிய வைப்புத்தொகைகளை எடுக்கவோ, அதன் எந்தக் கடமைகளின்கீழ் எந்தக் கொடுப்பனவுகளையும் விநியோகிக்கவோ, எந்த ஒப்பந்தத்திலும் நுழையவோ, அதன் சொத்துக்கள் எதையும் விற்கவோ முடியாது.

ரிசர்வ் வங்கி தனது அறிவுறுத்தல்களில், "குறிப்பாக, எந்தவொரு வைப்புத்தொகையாளரும் எந்தவொரு நடப்பு அல்லது சேமிப்புக் கணக்கு அல்லது வேறு எந்தக் கணக்கிலும் உள்ள மொத்தத் தொகையிலிருந்து 50,000 ரூபாய்க்கு மேல் எடுக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்" என்று கூறியுள்ளது. ஆனால், இந்த தடையை வங்கியின் மீது விதிப்பதால், அதன் உரிமம் ரத்து செய்யப்படுகிறது என்று அர்த்தமில்லை என்று ரிசர்வ் வங்கி தெளிவுபடுத்தியுள்ளது.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி கிழக்கு ,மேற்கு ஒன்றிய பேரூர் தி.மு.க. சார்பில் ஆண்டிபட்டி தனியார் மண்டபத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம்.ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ தலைமையில் மாபெரும் கருத்தரங்கு நடைபெற்றது. ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் முன்னிலை வகித்தார்,கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தலைமைக் கழக பேச்சாளர் தமிழன் பிரசன்னா,மாநில மாணவரணி தலைவர் தலைமை கழக பேச்சாளர் ராஜீவ்காந்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் மாநில தீர்மான குழு இணை செயலாளர் ஜெயக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆசையன், மாநில நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ராமசாமி,மாவட்ட துணை செயலாளர் குரு இளங்கோ பொதுக்குழு உறுப்பினர்கள்முல்லை சேகர். சேரன்,கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், ஆண்டிபட்டி பேரூராட்சி தலைவர் சந்திரகலா பொன்னுத்துரை ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். ஆண்டிபட்டி பேரூர் செயலாளர் சரவணன் நன்றி உரையாற்றினார்.

### சிவகங்கையை சேர்ந்த மூன்று இளைஞர்கள் - உலகளவில்

## சிலம்பு விளையாட்டு போட்டியில் முதலிடம் பெற்று தங்க பதக்கம் வென்று சாதனை!

சிவகங்கை, ஜூலை 31 -

நேபாளத்தில் உலக அளவில் இம்மாதம் 21 ஆம் தேதி முதல் 25ஆம் தேதி வரை பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. இதில் சிலம்பு விளையாட்டு போட்டியும் நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டின் சார்பில் சிவகங்கையைசேர்ந்த மதகுபட்டி சப்இன்ஸ்பெக்டர் நாச்சன்காளை மகன் பிரதீப் வயசு 27 பொறியியல் பட்டதாரி கமலக்கண்ணன் மகன்கள் கே. ஆதித்யன் வயசு 16 . கே .அருண் பிரகாஷ் வயசு 13 சகோதரர்கள்.

ஆகிய 3 பேரும் சிலம்பு விளையாட்டு போட்டியில் நேபாள நாட்டில் நடைபெற்றதில் பங்கேற்றார்கள். இதில் பஞ்சாப், அரியானா, இமாசல பிரதேசம், ராஜஸ்தான், டெல்லி ,மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட பல்வேறு நாடுகளில் இருந்து விளையாட்டு வீரர்கள் பங்கேற்றார்கள். இதில் சிலம்பாட்ட போட்டியில் பிரதீப் ஆதித்யன் அருண்பிர காஷ் ஆகிய மூன்று பேரும் முதல் இடம் வென்று தங்கப் பதக்கத்தினை பெற்றார்கள். இவர்களுக்கு தங்கப் பதக்கமும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்த விளையாட்டு வீரர்கள் சிவகங்கை பேருந்து நிலையத்தில் வந்து சேர்ந்தனர்.

அவர்களை ரோந்து காவல் நிலைய சப்இன்ஸ்பெக்டர் சவுரிமுத்து மற்றும் போலிசார் விளையாட்டு வீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், பொதுமக்கள் சால்வை மாலை அணிவித்து வானவேடிக்கைகளுடன் வரவேற்றார்கள்.

இவ்வாறு அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்கள்.



மதுரை கிழக்கு தொகுதி மேற்கு ஒன்றியத்தில் ரூபாய் 732லட்சங்கள் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி, நியாயவிலை கடை, ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் உள்ளிட்ட 23 முடிவுற்ற திட்டப்பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்ற போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, கூடுதல் ஆட்சியர் சரவணன், சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மேற்கு ஒன்றிய சேர்மன் வீரராகவன், துணை சேர்மன் கார்த்திக் ராஜா, மாவட்ட கவுன்சிலர் நேருபாண்டியன், ஒன்றிய செயலாளர் சிறைச்செல்வன் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் மற்றும் திரளான பொதுமக்கள் உள்ளனர்.

### முதல்வர் காணொலியில் தொடங்கி வைக்கிறார்!

## இராதாபுரம் தொகுதியில் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறை!

### சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தகவல்!

நெல்லை, ஜூலை 31 -

நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்ற தொகுதி முழுவதும் உள்ள அரசு,அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு முயற்சியால் நிறுவியுள்ளார். இதனை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி மூலம் இன்று 31 ந் தேதி திங்கட்கிழமை தொடங்கி வைக்கிறார்கள்.

இது தொடர்பாக பேரவை தலைவர் மு.அப்பாவு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்திருப்பதாவது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவ மாணவிகள் நவீன கல்வி கற்பதற்காக "நான் முதல்வன்" திட்டம் தந்த முதலமைச்சரின் கனவு திட்டமான தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் ஒரு ஸ்மார்ட் வகுப்பு அறை அமைத்து கொடுக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு திறக்கப்படுகிறது.மெட்ரிக் பள்ளியில் பயிலும் குழந்தைகளை போல் ஏழை குழந்தைகள் ஆங்கிலத்தில் சரளமாக பேசுவதற்கான வாய்ப்பு இதன் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.



இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் 295 அரசு மற்றும் அரசு உதவி பெறும் ஆரம்ப,நடுநிலை,உயர் நிலை, மேல்நிலை பள்ளிகள் மற்றும் பணகுடி, திசையன்விளை மனோ அறிவியல் கல்லூரிகள்,இராதாபுரம் ஐ.டி.ஐ முனைஞ்சிப்பட்டி ஆசிரியர் பயிற்சி நிறுவனம், நெல்லை மாவட்டம் முதன்மை கல்வி அலுவலகம்,நெல்லை மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை கல்வி)அலுவலகம்,வள்ளியூர் மாவட்ட கல்வி அலுவலகம் (தொடக்கக்கல்வி) அலுவலகம்,வள்ளியூர் மற்றும் ராதாபுரம் வட்டார கல்வி அலுவலகங்கள் உள்பட 306 இடங்களில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியில் இருந்தும் கூடங்குளம் அணுமின் திட்டம் மற்றும் தனியாக நிறுவனத்தின் சி.எஸ். ஆர். நிதியிலிருந்தும் ஸ்மார்ட் வகுப்பறை அமைக்கப்பட்டுள்ளது.வெப் கேமரா வசதியும், தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கான யு.பி.எஸ். வசதியும் செய்து கொடுக்கப்பட்டு ஸ்மார்ட் வகுப்பறை அனைத்தும் கம்ப்யூட்டர் சர்வர் மூலமாக கல்வித்துறை அலுவலகத்தோடு ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது.

இதன் மூலம் சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் வல்லுனர்களால் தினசரி அரை மணி நேரம் 1 முதல் 5ஆம் வகுப்பு வரையிலும் 6 முதல் 8ம் வகுப்பு வரையிலும் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலும் மாணவ,மாணவிகளுக்கு ஸ்போக்கன் இங்கிலீஷ் கற்று கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினரும் சட்டப்பேரவை தலைவரு மான அப்பாவின் சீரிய முயற்சியால் இப்பெரும் கல்விப் பணி இராதாபுரம் சட்டமன்ற தொகுதி முழுவதும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இராதாபுரம் தொகுதி பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள ஸ்மார்ட் வகுப்பறையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று 31ஆம் தேதி திங்கட்கிழமை சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொலி காட்சி மூலமாக தொடங்கி வைக்கிறார்கள்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்துள்ளார்.

## நெல்லை கிழக்கு - மத்திய மாவட்டக் கழகக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் - பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிவிப்பு!

நெல்லை, ஜூலை 31 -

கழக தலைவர், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி

நெல்லை கிழக்கு, நெல்லை மத்திய மாவட்ட கழக செயற்குழு கூட்டம் வருகிற 05.08.2023 சனிக்கிழமை காலை 10 மணிக்கு நெல்லை வண்ணாரப்பேட்டை ஹோட்டல் அஃப்னா பார்க் கூட்டங்கில் வைத்து நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்.என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.





இது தொடர்பாக அவர்கள் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை கிழக்கு,மத்திய மாவட்ட கழக செயற்குழு கூட்டம் வருகின்ற 0508 2023 சனிக்கிழமை காலை 10 மணிக்கு நெல்லை வண்ணாரப்பேட்டை ஹோட்டல் அஃப்னா பார்க் கூட்டரங்கில் வைத்து நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சரும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்.

கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள்,மாநில அணி நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர கழக,பகுதி கழக, ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட் டோர் தவறாமல் பங்கேற்று கருத்துக் களை வழங்கிட கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்:

1 முதலமைச்சர் கழகத் தலைவர் அன்பு தளபதியார் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்கும் வாக்குச்சாவடி முகவர்கள் கலந்துரையாடல் கூட்டம் சம்பந்தமாக.

2 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு தொடக்க விழா பொதுக்கூட்டங்கள்,தெருமுனை பிரச்சார கூட்டங்கள் சம்பந்தமாக.

3 . ஒன்றிய,நகர,பேரூர்,செயல் வீரர்கள் கூட்டங்கள்.

4. கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### மேட்டுப்பாளையத்தில்

## பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி!

மேட்டுப்பாளையம், ஜூலை 31 -

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 29ந்தேதி சர்வ தேச புலிகள் தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் கல்லார் புதூர் உண்டு, உறைவிடப்பள்ளி யில் வனத்துறை சார்பில் மாணவ மாணவிகளுக்கு பேச்சு, கட்டுரை மற்றும் ஓவிய போட்டிகள் நடத்தப்பட்டன.


மேட்டுப்பாளையம் வனச்சரகர் ஜோசப் ஸ்டாலின் தலைமை தாங்கி போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்.

முன்னதாக ஜோசப் ஸ்டாலின் புலிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

நிகழ்ச்சியில் மேட்டுப்பாளையம் வனவர் முனியாண்டி, பள்ளி நிர்வாகி ஷ்யாம் மற்றும் மாணவ, மாணவிகள் உள்பட 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே. தங்கபாண்டியன்
### ஜூலை 31 (1997)



**தென்பாண்டி மண்டலத்தில் கழகத்தை வளர்த்த முக்கிய தளகர்த்தர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்.**

**மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து 23 ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.**

**இருமுறை சட்டமன்ற உறுப்பினராகவும், இருமுறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், கலைஞர் அமைச்சரவையில் 1996ஆம் ஆண்டு கூட்டுறவு – வணிகவரித்துறை அமைச்சராகவும் பணியாற்றியவர்.**

**காரியாப்பட்டி ஒன்றியப் பெருந்தலைவர், மல்லாங்கிணறு பேரூராட்சித் தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**"மாவட்டச் செயலாளர் பணியில் வீரமிகு பாண்டியனாகவும், அமைச்சர் பொறுப்பில் பத்தரை மாற்றுத் தங்கமாகவும் திகழ்ந்தவர்" என தலைவர் கலைஞர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**